## March 12, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவை பதவி நீக்கக் கோரி எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் தோற்கடிக்கப்பட்டது.

2. பதிமூன்று ஆண்டுகளாக கோமாவில் சிகிச்சை பெற்றுவரும் 32 வயது இளைஞருக்கான சிகிச்சையை நிறுத்தி அவர் கண்ணியமாக மரணமடையச் செய்ய (கருணைக் கொலை) உச்சநீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. உச்ச நீதிமன்ற வரலாற்றில் இதுபோல தீர்ப்பு அளிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

(i) உத்தர பிரதேச மாநிலம், காஜியாபாத்தைச் சேர்ந்த பஞ்சாப் பல்கலைக்கழக மாணவரான ஹரீஷ் ராணா கடந்த 2013-ஆம் ஆண்டில் 4-ஆவது மாடியில் விளையாடிக் கொண்டிருந்தபோது கீழே தவறி விழுந்தார். இதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து, கடந்த 13 ஆண்டுகளாக அவர் கோமாவில் சிகிச்சை பெற்று வருகிறார். எனினும், ல்நிலையில் எந்த முன் னேற்றமும் ஏற்படவில்லை.

(ii) இதைத் தொடர்ந்து, ஹரீஷை கருணைக் கொலை செய்ய அனுமதிக்கக் கோரி, உச்சநீதிமன்றத்தில் அவரின் பெற்றோர் ரிட் மனு தாக்கல் செய்தனர். இந்த மனு மீதான விசாரணையின்போது அவரின் பெற்றோரை நீதிபதிகள் நேரில் சந்தித்து விவரம் கேட்டறிந்தனர். மேலும், தில்லி எய்ம்ஸ் மருத்துவர்களின் அறிக்கையையும் பார்வையிட்டு, ஹரீஷ் உடல்நிலை முன்னேறாது என்பதையும், தொடர்ந்து சிகிச்சை அளிப்பதால் எந்தப் பயனுமில்லை என்பதையும் நீதிபதிகள் உறுதி செய்தனர்.

(iii) இதைத் தொடர்ந்து, உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, கே.வி. விஸ்வநாதன் ஆகியோரைக் கொண்ட அமர்வு புதன்கிழமை தனது தீர்ப்பை வெளியிட்டது. அப்போது நீதிபதிகள் கூறுகையில், 'தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை வாரியங்கள், ஹரீஷுக்கான சிகிச்சையை நிறுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளன. ஆதலால் இதில் நீதித் துறை தலையிட வேண்டியதில்லை. எனவே, அவருக்கு அளிக்கும் சிகிச்சையை நிறுத்த உச்சநீதிமன்றம் அனுமதியளிக்கிறது. இந்த விவகாரத்தை மனிதாபிமான முறையில் அணுகுவது அவசியம். ஆதலால் சம்பந்தப்பட்டநபரின் கண்ணியத்துக்கு எந்த பங்கமும் ஏற்படாமல் அவருக்கான சிகிச்சையை நிறுத்துவது தொடர்பான திட்டம் செயல்படுத்தப்படுவதை தில்லி எய்ம்ஸ் உறுதி செய்ய வேண்டும். கருணைக் கொலை தொடர்பான சட்டத்தைக் கொண்டுவருவது குறித்து மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும்' என்றனர்.

3. உலகின் மிகமுக்கிய கடல் வணிகப் பாதையான ஹோர்முஸ் நீரிணையைக்கடக்க முயன்ற, இந்தியாவை நோக்கி வந்த தாய்லாந்து நாட்டின் வணிகக் கப்பல் மீது ஈரான் நடத்திய தாக்குதலில் 2 இந்திய மாலுமிகள் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

(i) உலகின் மொத்த கச்சா எண்ணெய் போக்குவரத்தில் 20 சதவீதத்தைக் கையாளும் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் முடக்கியுள்ளது. 'ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் எந்தவொரு கப்பலும் குறிவைக்கப்படும்' என்று அந்நாடு ஏற்கெனவே எச்சரித் துள்ளது.

(ii) இந்நிலையில், குஜராத் மாநிலம் காண்ட்லா துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த தாய்லாந்தின் 'மயூரி நாரீ' சரக்குக் கப்பல் ஹோர்முஸ் நீரிணையை கடக்க முயன்ற போது, அதை ஈரான் ஏவுகணை வீசி தாக்கியது. இதில் கப்பலின் என்ஜின் அறையில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. ஓமன் கடற்படையினர் 20 பேரை மீட்ட நிலையில், என்ஜின் அறையில் 3 மாலுமிகள் சிக்கினர். இதில் 2 இந்தியர்கள் உயிரி ழந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(iii) அவசரகால இருப்பை வெளியிட ஐஏஇ பரிந்துரை :-

- ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளதால், 1970-களுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய எரிசக்தி விநியோகத் தடையால் உலக நாடுகள் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன.

- இந்த நிலைமையைச் சமாளிக்க 40 கோடி பீப்பாய் அவசர கால எண்ணெய் இருப்பை சந்தையில் வெளியிட சர்வதேச எரிசக்தி முகமை (ஐஇஏ) உறுப்பு நாடுகளுக்குப் பரிந்துரைத்துள்ளது. இது ரஷியா- உக்ரைன் போரின்போது விடு விக்கப்பட்ட அளவைவிட 2 மடங்கு அதிகமாகும்.

4. திருச்சி அருகே உள்ள பஞ்சப்பூரில், மின்சாரம், நெடுஞ்சாலைகள் மற்றும் கிராமப்புற இணைப்புத் துறைகளில் ரூ.5,655 கோடி மதிப்பிலான திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார், அடிக்கல் நாட்டினார் மற்றும் 5 புதிய ரயில் சேவைகளைத் தொடங்கி வெத்தார் :-

(i) 9 லட்சம் குடும்பங்களுக்கு இயற்கை எரிவாயு:

- பாரத் பெட்ரோலியத்தின் நகர எரிவாயு விநியோக வலையமைப்புக்கு அடிக்கல் நாட்டப்படுவதன் மூலம் ரூ.3,700 கோடி முதலீடு செய்யப்படுகிறது. இந்த வலையமைப்பு நீலகிரி, ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கியது. 9 லட்சம் குடும்பங்களுக்கும், நூற்றுக்கணக்கான வணிக நிறுவனங்களுக்கும் குழாய் மூலம் இயற்கை எரிவாயுவை வழங்கும். குழாய் வழியாக எரிவாயு நேரடியாக அவரவர் இல்லங்களுக்குச் சென்று வாழ்க்கையை எளிதாக்கும். ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் உருவாக்கப்படும்.
- இயற்கை எரிவாயு என்பது சுற்றுச்சூழலுக்கு உகந்த எரிபொருளாகும். காற்று மாசுபாட்டைக் குறைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. 8 ஆண்டுகளில் இந்தத் திட்டத்தின் நேர்மறையான சுற்றுச்சூழல் தாக்கம் என்பது நான்கு கோடி மரங்களை நடுவதற்கு சமமாக இருக்கும்.

(ii) மசகு எண்ணெய் ஆலை:

- சென்னையில் உள்ள இந்திய எண்ணெய் நிறுவனத்தின் மசகு எண்ணெய் கலப்பு ஆலை நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. இது, ரூ.1,490 கோடி முதலீட்டில் கட்டப்பட்ட உலகின் மிகப்பெரிய மசகு எண்ணெய் கலப்பு ஆலைகளில் ஒன்றாகும். இந்த ஆலை, தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பல முக்கியமான தொழில்களின் தேவையை பூர்த்தி செய்கிறது. உள்ளூரில் மசகு எண்ணெய் உற்பத்தியை அதிகரித்து, இறக்கு மதியைக் குறைத்து தேசத்திற்கு பணத்தை மிச்சப்படுத்துகிறது.

(iii) 370 கி.மீ.-க்கு கிராமச் சாலைகள்:

- பிரதமரின் கிராமச் சாலைகள் திட்டம் மூலம், 370 கி.மீ. தொலைவுக்கு கிராமப்புற சாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

(iv) 5 புதிய ரயில் சேவைகள்:

- கடந்த வாரம்,மதுரையில் இருந்து, அம்ருத் பாரத் திட்டத் தின்கீழ், 8 நவீனமயமாக்கப்பட்ட மற்றும் மறுவடிவமைப்பு செய்யப்பட்ட ரயில் நிலையங்களைத் திறந்துவைத்தோம்.
- இதன் தொடர்ச்சியாக, தற்போது 5 புதிய ரயில்களின் சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன. இவை, நாகர்கோவில், கோவை, ராமேசுவரம், திருநெல்வேலி, மயிலாடுதுறை, காரைக்குடி உள்ளிட்ட பகுதிகளை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்கின்றன. இந்தப் புதிய ரயில் சேவைகள் சுற்றுலாவை அதிகரிக்கும். உள்ளூர் பொருளாதாரத்தை உயர்த்தும். இளைஞர்களுக்கு பல வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

5. தமிழகத்தில் பதிவாகும் புற்றுநோய் பாதிப்புகளை கண்காணிப்பதற்கான பிரத்யேக இணையதளத்தை TN-CReSt என்ற புதிய இணையதளத்தை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் புதன்கிழமை தொடங்கியது.

(i) இதன் மூலம் தமிழ்நாடு புற்றுநோய் பதிவேட்டுத் தரவுகளை பொதுமக்கள் மற்றும் ஆய்வாளர்கள் இனி இணைய வழியில் எளிதாகப் பெற முடியும். அடையாறு புற்றுநோய் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் வி.சாந்தாவின் நூற்றாண்டை யொட்டி இந்த இணையதளம்

தொடங்கப்பட்டுள்ளது. அதில் புற்றுநோயாளிகளின் தனிப்பட்ட விவரங்களைத் தவிர்த்து, அவர்களுக்கு பாதிப்பு கண்டறியப்பட்ட வயது, பாலினம், கண்டறியப்பட்ட ஆண்டு, வசிக்கும் மாவட்டம் மற்றும் புற்றுநோயின் வகை ஆகியவற்றைத் தனித்தனியாகவோ அல்லது ஒருங்கிணைந்தோ பெறமுடியும்.

(ii) மேலும், அண்மைக் கால புற்றுநோய் புள்ளிவிவரங்கள், அதன் விகிதம், அடுத்து வரும் ஆண்டுகளில் அதன் தாக்கம் குறித்த தகவல்களையும் பெறலாம். சுகாதார அலுவலர்கள், மருத்துவர்கள், ஆராய்ச் சியாளர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கு இது பெரிதும் பயனளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) புற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள், புதிய சிகிச்சை முறைகளை மேம்படுத்துவதில் இந்தத் தளம் பங்களிக்கும் என்று அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி மைய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

6. 'ஈரான் மீதான அமெரிக்கா, இஸ்ரேலின் தாக்குதல், சர்வதேச சட்டங்களை வெளிப்படையாக மீறும் செயல்' என்று இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி கடுமையாக சாடினார்.

7. அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணம் பிரௌன்ஸ்வில்லியில் அமைக்கப்படவிருக்கும் புதிய கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் திட்டத்தில் இந்தியத் தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனம் ரூ.28 லட்சம் கோடி முதலீடு செய்யவிருப்பது தெரியவந்துள்ளது. இந்தத் தகவலை தனது 'ட்ரூத்' சமூக ஊடகபக்கத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் புதன்கிழமை பதிவிட்டார். அந்தப் பதிவில் அவர் கூறியிருப்பதாவது:

(i) அமெரிக்காவில் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத வகையில், பிரௌன்ஸ்வில்லியில் முதல் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் திறக்கப்படவுள்ளது. இது அமெரிக்க வரலாற்றில் மிகப்பெரிய விஷயமாகும்.

(ii) டெக்சாஸ் மக்களுக்கும், அமெரிக்க தொழிலாளர்களுக்கும், எரிசக்திக்குமான மிகப்பெரிய வெற்றி. இத்திட்டம், அமெரிக்க எண்ணெய் சந்தையையும், தேசத்தின் பாதுகாப்பையும் மேலும் வலுப்படுத்தும்; அமெரிக்க எரிசக்தி உற்பத்தியையும் ஊக்குவிக்கும்.

(iii) அமெரிக்காவின் ஷெல் எண்ணெய் நிறுவனம் முழுமையாக நிர்வகிக்க உள்ள இந்தப் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் திட்டத்தில் இந்தியாவின் ரிலையன்ஸ் நிறுவனம் முதலீடு செய்ய விருக்கிறது. இதற்காக, வரலாற்றுச் சிறப்புமிக்க ரூ.27.6 லட்சம் கோடி (30,000 கோடி டாலர்) மதிப்பிலான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்.

(iv) நிகழாண்டின் ஏப்ரலில் தொடங்கும் 2-ஆம் காலாண்டில் இந்தப் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு சுத்திகரிக்கப்படும் எரிபொருளை அடுத்த 20 ஆண்டுகளுக்கு வாங்க ரிலையன்ஸ் நிறுவனம் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.

(v) மேலும், இந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை முழுமையாக கட்டி முடிக்கப்பட்டால், 1977-ஆம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்காவில் கட்டப்பட்டுள்ள முதல் புதிய மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் என்ற பெருமையைப் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vi) ரிலையன்ஸ் நிறுவனம் அமெரிக்காவில நீண்ட காலமாக எரிசக்தி வர்த்த கத்திலும், தொழில்நுட்பக் கூட்டு றவிலும் ஈடுபட்டு வருகிறது. ஆனால், இந்த ஒப்பந்தம் குறித்து ரிலையன்ஸ் நிறுவனம் தரப்பில் உடனடியாக எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. ஈரான் மீதான அமெரிக்கா, இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதலால், இந்தியா உள்பட பல்வேறு நாடுகளில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விநியோ கத்துக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ள நிலையில், இத்தகவலை டிரம்ப் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

8. இந்தியாவுக்கு மீண்டும் எஃப்1 கார் பந்தயத்தை கொண்டு வரும் முயற்சியாக, மோட்டார் விளையாட்டு கிளப்புகளுக் கான இந்திய சம்மேளன (எஃப் எம்எஸ்சிஐ) அதிகாரிகளுடன் மத்திய

விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா புதன்கிழமை பேச்சுவார்த்தை நடத்தினார்.

9. தலைமைத் தேர்தல் ஞானேஷ் குமாரை பதவி நீக்கும் தீர்மானத்தை கொண்டு வருவதற்கான நோட்டீஸை நாடாளுன்றத்தில் வியாழக்கிழமை (மார்ச் 12) அல்லது வெள்ளிக்கிழமை (மார்ச் 13) தாக்கல் செய்ய எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து தில்லி வட்டாரத் தகவல்கள் கூறியதாவது:

(i) எஸ்.ஐ.ஆர். விவகாரத்தால் ஞானேஷ் குமார் மீது எதிர்க் கட்சிகள் கடும் அதிருப்தியில் உள்ளன. இதையடுத்து, அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பதவி நீக்கம் செய்யக்கோரும் தீர்மானத்தைக் கொண்டு வர எதிர்க் கட்சிகள் முடிவு செய்தன.

(ii) மக்களவையில் தீர்மானத்தை தாக்கல் செய்ய வேண்டுமெனில், அதுதொடர்பான நோட்டீஸில் குறைந்தபட்சம் அந்த அவையைச் சேர்ந்த 100 எம்.பி.க்களின் கையொப்பம் தேவை. அதேபோல் மாநிலங்களவையில் தாக்கல் செய்ய 50 எம்.பி.க்களின் கையொப்பம் தேவை. அதன்படி, எம்.பி.க்களின் கையொப்பங்களை திரட்டும் பணியில் எதிர்க்கட்சிகள் கடந்த சில நாள்களாக ஈடுபட்டிருந்தன. அவையில் தாக்கல் செய்ய தேவையான எம்.பி.க்களின் கையொப்பம் பெறப்பட்டுவிட்டது. மக்களவையைச் சேர்ந்த 120 எம்.பி.க்களும், மாநிலங்களவையை சேர்ந்த 60 எம்.பி.க்களும் கையொப்பமிட்டுள்ளனர். 'இண்டி' கூட்டணியைச் சேர்ந்த எம்.பி.க்கள் அனைவரும் கையொப்பமிட்டுவிட்டனர்.

(iii) இதைத் தொடர்ந்து, நாடாளுமன்ற இரு அவைகளிலும் நோட்டீஸை வியாழன் (மார்ச் 12), அல்லது வெள்ளியன்று (மார்ச் 13) தாக்கல் செய்ய எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

10. மேற்காசியாவில் போர் நடந்துவரும் சூழலில், ஹோர்முஸ் நீரிணை அல்லாத மாற்று வழிகள் மூலம் கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு கொள்முதல் நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுவருகிறது என்று மத்திய பெட்ரோலிய அமைச்சக இணைச் செயலர் தெரிவித்தார்.

(i) மேற்காசியபோர் நிலவரம் காரணமாக பாரசீக வளைகுடாவில் முக்கிய கப்பல் போக்குவரத்து வழித்தடமான ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டது மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தியை கத்தார் முழுமையாக நிறுத்தியது உள்ளிட்ட காரணங்களால் இந்தியாவில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

(ii) தட்டுப்பாட்டைத் தடுக்க சமையல் எரிவாயு உற்பத்தியை அதிகரிக்குமாறு எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு அவசரகால உத்தரவை மத்திய அரசு பிறப்பித்தது. மேலும், அதன் விநியோகத்தில் கட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

(iii) இந்தியாவின் தினசரி கச்சா எண்ணெய் நுகர்வு 55 லட்சம் பீப்பாய்களாகும். பன்முக கொள்முதல் திட்டங்கள் மூலம் 40 நாடுகளிடமிருந்து இவை பெறப்படுகின்றன. மத்திய அரசு தற்போது மேற்கொண்டுள்ள மாற்று நடவடிக்கைகள் காரணமாக, ஹோர்முஸ் நீர்ணை வழியாக வழக்கமாக பெறப்படும் கச்சா எண்ணெய் அளவைவிட கொள்முதல் அளவு தற்போது கூடியுள்ளது. மேலும், மத்திய அரசு பிறப்பித்த அவசரகால உத்தரவு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, உள்நாட்டு சமையல் எரிவாயு (எல்பிஜி) உற்பத்தி 25 சதவீதம் உயர்ந்துள்ளது.

(iv) எனவே, சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவு குறித்து நுகர்வோர் அச்சப்படத் தேவையில்லை. வழக்கமான விநியோக சுழற்சி அடிப்படையில், முன்பதிவு செய்த இரண்டரை நாள்களில் சிலிண்டர் விநியோகம் செய்யப்படும்.

11. கழிவு மேலாண்மையில் உள்ள சவால்கள்

(i) வளர்ந்து வரும் நெருக்கடி மற்றும் நகர்ப்புற விரிவாக்கம்

- விரைவான மற்றும் திட்டமிடப்படாத நகர்ப்புற விரிவாக்கத்தின் விளைவாக, 30 ஆண்டுகளுக்கு முன்பு நகரங்களின் புறநகரில் இருந்த பழைய குப்பைக் கிடங்குகள்

இப்போது அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட நகர எல்லைக்குள் அமைந்துள்ளன.

- வெள்ளலூர் குப்பைக் கிடங்கு (கோயம்புத்தூர்) 20 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது, 650 ஏக்கர் பரப்பளவில் தினமும் 1,200 டன் கழிவுகளைப் பெறுகிறது. இந்த இடத்தில் ஏற்படும் தீ விபத்துகள் பல கிலோமீட்டர் தொலைவில் வசிப்பவர்களுக்கு கடுமையான துர்நாற்றம் மற்றும் சுவாசப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.
- திருப்பூரில் தொழில்துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சி காரணமாக, கடந்த 40 ஆண்டுகளாக பாறைக் குழிகளில் கழிவுகள் கொட்டப்படுகின்றன, இது குறிப்பிடத்தக்க பொது எதிர்ப்புகள் மற்றும் சட்டப் போராட்டங்களுக்கு வழிவகுத்தது.
- புது தில்லியில், காஜிப்பூர், ஒக்லா மற்றும் பால்ஸ்வா போன்ற இடங்கள் மிகப்பெரிய "குப்பை மலைகளாக" மாறியுள்ளன. 2027-28 ஆம் ஆண்டுக்குள் காஜிப்பூர் குப்பை மலையின் உயரத்தை கணிசமாகக் குறைக்க அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

(ii) சட்ட உத்தரவுகள் மற்றும் அபராதங்கள்

- 2023 ஆம் ஆண்டில், தேசிய பசுமைத் தீர்ப்பாயம், ஆதம்பூர் குப்பைக் கிடங்கில் கழிவு மேலாண்மை விதிகளை மீறியதற்காக போபால் நகராட்சிக்கு (மத்தியப் பிரதேசம்) ₹1.80 கோடி அபராதம் விதித்தது.
- வீடுகள் மற்றும் நிறுவனங்களில் இருந்து வரும் கழிவுகளை நான்கு தனித்தனி பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது:

1. மக்கும் கழிவுகள் (எ.கா., காய்கறி/உணவுக் கழிவுகள்).

2. மக்காத கழிவுகள் (எ.கா., பிளாஸ்டிக்).

3. மருத்துவக் கழிவுகள் (எ.கா., கையுறைகள், ஊசிகள், காலாவதியான மருந்துகள்).

4. அபாயகரமான கழிவுகள் (எ.கா., பேட்டரிகள், மடிக்கணினிகள், மொபைல் போன்கள் மற்றும் அவற்றின் பாகங்கள்).

- இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் நாடு தழுவிய அளவில் கண்டிப்பாக செயல்படுத்தப்பட உள்ளன.
- மேயர்கள் மற்றும் கவுன்சிலர்கள் பிரிப்பதை உறுதி செய்வதற்கான முதன்மை ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். தனிநபர்கள் அல்லது உள்ளாட்சி அமைப்புகள் மீறினால் முதலில் அபராதம் விதிக்கப்படும்; தொடர்ந்து இணங்கத் தவறினால் சுற்றுச்சூழல் சட்டங்களின் கீழ் குற்றவியல் வழக்குத் தொடரப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

(iii) தீர்வுகள் மற்றும் விழிப்புணர்வு

- ஆரம்பகால விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பள்ளிப் பாடத்திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மையை சேர்க்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- கோயம்புத்தூரில், மக்கும் கழிவுகளைக் கையாள 33 நுண் உரம் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன, இருப்பினும் இது உருவாக்கப்படும் மொத்த கழிவுகளுடன் ஒப்பிடும்போது போதுமானதாக இல்லை.
- வீட்டிலேயே கழிவுகளைப் பிரித்து பொது இடங்களில் கொட்டுவதை நிறுத்துவதற்கு பொதுமக்கள் உறுதியான தீர்மானத்தை எடுத்தால் மட்டுமே அரசாங்க விழிப்புணர்வுத் திட்டங்களும் நீதிமன்ற உத்தரவுகளும் வெற்றிபெற முடியும். நீண்டகால தீர்வாக கழிவுகளைப் பயன்படுத்தக்கூடிய வளங்களாக மாற்றுவதற்கான ஆராய்ச்சிக்கு முன்னுரிமை அளிக்குமாறு மத்திய மற்றும் மாநில அரசுகள் வலியுறுத்தப்படுகிஂன்றன